தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 13 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை 25—5—57 சனிக்கிழமை | இதழ் 36



நாளந்தா நாயகன்

நாளந்தா - இந்தப் பெயரை கேட்கும்போதும், படிக்கும் போதும் நமது எண்ணத்திலே ஒருமின்னல்திடீரெனத்தோன்று கிறது. பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நமது நினைவுகள் இழுத்துச் செல்லப்படுகின்றன. ஆம்! நாளந்தா பல்கலைக் கழகம் எட்டுக் கல்லூரிகளை தன்னகத்தே கொண்டு ஆயிரக்கணக்கான மாணவர்களைப் பேரறிஞர்களாக உலகத்துக்கு அளித்தது. நாளந்தா பல்கலைக் கழகம் எட்டாம் நூற்றாண்டில், மிகச் சிறந்ததொரு அறிவாலயமாக விளங்கியது.

பல்கலைக் கழகத்தின் கட்டிடங்கள் வானாளாவி நின்றன! தூண்களிலும், சுவர்களிலும், மணிகள் பதிக்கப்பட்டிருந்தன. செல்வத்தால் மட்டும் சிறந்து விளங்கியதல்ல நாளந்தா! அறிவுச் செல்வத்திலும், அதற்கீடான இடம் அந்த நாளிலே வேறு இருந்ததே இல்லை.

நாளந்தாவிலே மாணிக்கக் கடல், மாணிக்க சமுத்திரம், மாணிக்கக் குவியல் என முப்பெருநூல் நிலையங்கள் இருந்தன. அந்த நூல் நிலையங்களிலே எல்லாத் துறைகளுக்கும் வேண்டிய ஆராய்ச்சி நூல்கள் குவிந்துகிடந்தன. நாளந்தா பல்கலைச்கழகம் அக்கால உலகின் கலைச்செல்வங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்கியது.

உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் அங்கே வந்து கற்றுத் தேர்ந்து சென்றனர். குறிப்பாக பௌத்த நாடுகளான சீனு, திபேத், கொரியா முதலியவற்றைச் சேர்ந்தவர்கள் மிகுதியாக இங்கே வந்தனர்.

நாளந்தா பல்கலைக் கழகம் புத்த பண்பாட்டில் திகழ்ந்த தென்ருலும்மற்ற இந்தியப் பல்கலைக் கழகங்களைப்போலவே பொது முறையில் இயங்கி வந்தது. "ஹியான் ஸியாங்"கின் சுயசரிதத்திலிருந்து இங்கே புத்தரின் தத்துவங்கள் மட்டுமின்றி காங்கியம், தர்க்கம், தத்துவம், கணிதம், இலக்கியம் ஆகியவைகள் சிறப்பாகப் பயிற்றுவிக்கப் பட்டன என்று தெரிய வருகிறது.

"விவாதத்தில் பேரும் புகழும் பெற பல்வேறு பட்டணங்களில் இருந்து எண்ணற்றோர் வந்து இங்கே குவிகின்றனர்" என்று அதே யாத்ரீகர் கூறுகிருர்.

அங்கே எல்லா மொழி வல்லுனர்களும் இருந்திருக்கின்றனர். அறிவின் பிறப்பிடமான காஞ்சியின் தமிழ்ப் பேரறிஞர் தர்மபாலர், நாளந்தா பல்கலைக் கழகத்தின் தலைமைப் பேராசிரியராகப் பணியாற்றியிருக்கிருர்.

நாளந்தா - கலைஞானத்தைக் கற்றுத் தேர்ந்த ஆயிரமாயிரம் அறிவியல் மேதைகளை உலகெங்கும் அனுப்பி, புத்தரின் கோட்பாடுகளையும் அறிவொளியையும் பரப்பியது. திபேத்தில் இன்றும் நாளந்தாவின் சிறந்த பொக்கிஷங்கள் பல பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

புத்த மதம் வியாபித்திருந்த இடமெல்லாம், நாகரீகத்தையும் கலாச்சாரத்தையும் பரப்பியது நாளந்தா.

அறிவாலயமான நாளந்தாவின் நடுநாயகமாக விளங்கியவர் புத்தர். புத்தரின் கோட்பாடுகள் தத்துவங்கள், ஆராய்ச்சி இவற்றின் அடிப்படையிலேயே அப்பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. புத்த மதத்தைச் சேர்ந்த துறவிகளே இங்கு பேராசிரியர்களாகப் பணியாற்றி வந்தனர்.

புத்த மதத்தின் வளர்ச்சி கண்டு பொங்கிய இந்து மதத்தவர்களும், மதத்தலைவர்கள் என்று கூறப்பட்டவர்களும் நாளந்தா நிலைபெற்று விடுமானல், அறிவுலகம் தங்களை மக்கள் மத்தியிலிருந்து தூக்கி எறிந்துவிடும் என்பதை அறிந்து நாளந்தா பல்கலைக் கழகத்துக்குத் தீயிட்டுவிட்டனர். இந்து மதத் தலைவர்களின் பொருமைத் தீயின் ஜ்வாலையிலே அந்த அறிவாலயம் கருகிச் சாம்பலாகி

விட்டது. ஈடுகட்ட முடியாத பெரியதோர் நட்டம் அறிவுப்பசி கொண்டவர்களுக்கு ஏற்பட்டு விட்டது.

நாளந்தாவின் நாயகராக விளங்கிய புத்தரைத்தான் கவிமணி 'ஆசிய ஜோதி' என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

ஆனால் இன்று தன்னைச் சேர்ந்தவர்களால் "ஆசியாவின் ஜோதி-அணையாததிருவிளக்கு" என்று போற்றப்படும் நேரு புத்தர் விழாவிலே கலந்துகொள்வதற்குக் கொஞ்சம்கூடத் தயங்குவதில்லை. "புத்தரின் நீதி முறைகளை, தர்ம மார்க்கங்களை நான் உலகுக்கு எடுத்துக் கூறுகிறேன்" என்று பெருமைபேசித் தப்பட்டமடித்துக் கொள்கிறார் நேரு.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல்"

என்ற வள்ளுவன் வாக்குக்கு இலக்கணமாக விளங்குபவர் நேரு.

உலக சமாதானத்துக்காக "பஞ்சசீலம்" ஓதிய பாகவத சிரோண்மணி நேரு! பாவம் அண்மையிலே இலங்கையிலே அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார் தன்னுடைய பஞ்சசீலம்,புளித்து விட்டதென்று.

அறவழி நின்று நெறி முறைகளை போதித்த புத்தரைப் பற்றிப் பேசுவதற்கும், புத்தரின் விழாக் களிலே கலந்துகொண்டு பேசுவதற்கும் நேரு போன்றவர்களுக்கு என்ன தகுதியும் யோக்கியப் பொறுப்பும் இருக்கிறது என்பதே கேள்வி!

நாளாந்தாவைத் தீயிட்டுக் கொளுத்திய இந்து மதத்தின் காவலர்களாக விளங்குகின்றனர் நேருவும் அவரது சகாக்களும்! பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து சோமநாதர் ஆலயத்தைப் புதுப்பித்த சர்க்காரின் தலைமைப் பீடத்தில் இருக்கும் நேருதான் புத்தரின் வழியைக் கடைப்பிடிக்கிறேன் என்கிறார்!

'கொல்லாமை' என்னும் அறத்தை வலிமையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறிய புத்தரையும் அவரது கோட்பாடுகளையும் புகழ்ந்து கொண்டிருக்கும் நேருவின் சர்க்கார்தான், துப்பாக்கித் துரைத்தனமும், தடியடி தர்பாரும் நடத்துகிறது. ஆனாலும் நேரு பேசிக்கொண்டே இருக்கிறார் புத்தரின் அறநெறிகளைப் பற்றி!

இந்து மதத்தின் காவலர்களின் காலைக் கழுவி, அந்த நீரைக் குடித்து, "பேறு பெற்றேன், பேறு பெற்றேன்" என்று கூறிக்கொண்ட இராசேந்திரரைக் குடியரசுத் தலைவராகக் கொண்ட சர்க்காரிலே அங்கம் வகிக்கும் நேரு பேசுகிறார் புத்தரின் வழி சிறந்ததென்று! அமெரிக்காவுக்குப் புறப்படு முன் சென்னையிலே பேசிய விவேகானந்தர் "புத்தரின் போதனைகளால், தத்துவங்களால், கோட்பாடுகளால் உலகம் கெட்டுவிட்டது" என்று கூறினார். அந்த விவேகானந்தர் சபையினரும் இராமகிருஷ்ண மடாலயத்தினரும் இலங்கையில் கூட்டாக அளித்த வரவேற்பில் நான்கு நாட்களுக்கு முன் நேரு புத்தரைப் பற்றிப் பேசியிருக்கிறார். கடவுள் கொள்கையையே ஒப்புக்கொள்ளாத புத்தரைப் பற்றி, சிலை வணக்கம் வேண்டும் என்று கூறிய சபையிலே நேரு பேசி இருக்கிறார். எத்தனை முரண்பாடு!

நேரு உலகெங்கும் போய்ப் புத்தரின் கொள்கைகளைப்பரப்புகிறேன் என்று சொல்லிப் புகழ்ப் பரணி பாடுகிறார். ஆனால் இதே நேருவால், புத்த மதம் அழிவதற்குக் காரணமாய் இருந்த இந்து மதத்திலே சாதாரண திருத்தங்களைக்கூடச் செய்ய முடியவில்லை! இந்து சட்டத் திருத்த மசோதா மக்கள் சபையிலே பலமுறை தோற்கடிக்கப் பட்டது! நேரு மனதில் நினைப்பதில் ஒன்றைக்கூட இந்து மதத்திற்கு எதிராகச் செய்யமுடியவில்லை! ஆனாலும் உலகுக்கு புத்தரின் நீதியைப் போதிக்கப் புறப்பட்டு விடுகிறார்!

சர்க்காரின் உண்மையான நோக்கம்தான் என்ன? புத்தரின் புனிதக் கொள்கைகளைப் பரப்புவதா? அல்லது உலக செல்வாக்கிற்கு ஏற்றாற்போல், 'புத்தரை உலகம் போற்றுகிறதே. இந்த நேரத்தில் 'சிவாய நம வென்று சிந்தித்திருப்போர்க்கு' என்றால் சிரிப்பார்களே' என்பதற்காகப் புத்தர் எம்பெருமான் என்கிறார்களா என்று நமக்குப் புரியவில்லை.

காசிக்குப் போகிறார்கள், சேதுக் கரைக்கு வருகிறார்கள், காஞ்சிக்குப் போகிறார்கள், மதுரை போய் மீனாட்சியைத் 'தரிசிக்கிறார்கள்' அதே நேரத்தில் புத்தர் விழாவிலும் கலந்துகொள்கிறார்கள். என்னதான் சர்க்கார் நினைக்கிறது?

கதரை ஆதரிப்பது, ஆலைத் துணியை ஆதரிப்பது என்றால் உண்மையில் சர்க்கார் எதை ஆதரிக்கிறது?-இதுமாதிரி ஒரு குழப்பந்தான் புத்தர் பற்றிய குழப்பமும்! காங்கிரஸ் சர்க்காருக்கு எந்தக் கொள்கையிலும் திட்டவட்டமான முடிவு இல்லை!

புத்தர் கொள்கைகள்தான் நல்ல கொள்கைகள் என்று தெரிந்தும் அந்தக் கொள்கைகளைத்தான் உலகம் பின்பற்றுகிறது என்று தெரிந்தும், புத்தர் பிறந்த நாட்டில் அவரது கொள்கைகளுக்கு வரவேற்பில்லாமல், பிறநாடுகளில் தான் அவரது சித்தாந்தங்களுக்கு வரவேற்பிருக்கிறது, அதற்குக் காரணம் இந்தியத் துணைக்கண்டத்தில் கீர்த்தியோடு வாழும் இந்து மதம்தான் என்று தெரிந்தும் புத்தர் கொள்கைகளை ஏன் சர்க்கார் கடைப்பிடிக்கவில்லை, அதன் வளர்ச்சிக்குப் பாடுபடவில்லை!

காரணம் கேட்டால் மதச்சுதந்திரம் என்பார்கள்! சாகப் போகிறவனை, கெட்டுப்போக நினைப்பவனை தடுக்காமல் பார்த்துக்கொண்டிருப்பது அவனுக்குச் சுதந்திரம்கொடுத்ததாகுமா? நல்லதைத் தேர்ந்தெடுத்து, நல்வினைகளுக்கு மக்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு இல்லாத சர்க்கார் என்ன சர்க்கார்? சர்க்கார் நோட்டடித்தால் மட்டும் போதுமா?

—சிந்தாமணி, பி.ஏ.

கிளைக் கழகச் செயலாளர்களுக்கு

அறிவிப்பு

சிற்றூர்—பேரூர்—நகரக் கிளைக் (சென்னை நகரில் வட்டம்) கழகங்களில் ஏற்படும் நிர்வாகிகள் மாறுதல் குறித்தும், புதிய கிளை திறக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் விபரமும் நேரடியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பாமல், அந்தந்த மாவட்டச் செயலாளர் (அல்லது துணைச் செயலாளர்) பார்வைக்கு அனுப்பி, அவரது கையொப்பத்துடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

'நம் நாடு' இதழில் பிரசுரிக்க அனுப்பும் நிர்வாகிகள் மாறுதல், புதிய நிர்வாகிகள் விபரம் போன்றவைகளும் மாவட்டச் செயலாளர் கையொப்பத்துடன் அனுப்ப வைத்தால்தான் பிரசுரிப்பதற்கு வசதிப்படும் என்பதும், இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

விளக்கு அணைந்தது!

தெலுங்குச் சீமையின் அரசியல் முன்னோடியாகவும், இந்தியத் துணைக்கண்டத்து விடுதலைச் சரித்திரத்தின் கதாநாயகர்களில் ஒருவராகத் திகழ்ந்தவருமான திரு. டி. பிரகாசம் அவர்கள் இரண்டு நாள் படுக்கையில் கிடந்து இயற்கை எய்தினார் என்ற துக்கச்செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம்.

பிரகாசத்தின் மறைவு இந்தியத் துணைக்கண்டத்து அரசியலுக்கு பெரு நட்டமென்பதை எதிர்க்கட்சிக்காரர்கள்கூட ஒப்புக்கொள்வார்கள்.

எதிரிகளின் பலத்திற்கு ஏற்றாற்போல் தன் கருத்தை மாற்றிக்கொண்டு பேசவேண்டும் என்ற சாரமற்ற போக்கைப் பிரகாசம் சாகும்வரை ஏற்றுக்கொண்டதில்லை. மெஜாரிடிக்குப் பயந்து பேசும் சுபாவமும் அவருக்கு இருந்ததில்லை. மாற்றாரின் பேரவையானாலும் தன் கருத்தை அழகுபட எடுத்துரைக்கத் தயங்கமாட்டார் திரு. பிரகாசம். அவருடைய அரசியல் வாழ்க்கையில், அவருடைய தாக்குதலில் மிரண்டனர் பலர். உருவத்தைக் கண்டு பயந்தனர் பலர். திரு. பிரகாசம் எதிர்நீச்சல் போட்டுத்தான் பிரகாசமானார் அரசியலில் என்பதற்கு அவருடைய பலசாதனைகள் நமக்கு சான்று பகர்கின்றன. யார், எந்தப் பதவி வகித்தாலும், பிரகாசம் தாங்கியிருந்த பதவி எப்போதும் சிறப்புப்பெயர் பெற்றே மறைந்திருக்கிறது என்பதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள்.

கட்டபொம்மனைப்போல் உயர்ந்திருந்தால்தான், ராஜபுத்திரர்களைப் போல் விரிந்த மார்பிருந்தால்தான் வீரர்களுக்கழகு என்பதைப் பிரகாசத்தின் உருவம் உடைத்தெறிந்துவிட்டது. தொண்டுள்ளத்தை எதிரொலிக்கும் எளிய ஆடையுடுத்திக்கொள்வதிலே அவருக்கு அதிக விருப்பம். வர்ணப்பூப் போட்ட தடித்த கதர் துணியைப் போர்த்திக் கொள்வதிலே தான் அவருக்கு அதிகப் பிரியம். எப்போதும் அதுமாதிரித் துண்டுகளையே போட்டுக்கொள்வார்.

மாற்றுக் கொள்கையினரானாலும், ஆந்திரத்தைப் பொறுத்தமட்டில் 'பிரகாசம்' என்றால் ஒரு மரியாதை காட்டினார்கள். அவர்களையுமறியாமல் அந்தப் பணிவு அவர்கள் நெஞ்சில் குடிகொண்டுவிட்டது. அத்தகைய அரசியல் முன்னோடி இயற்கை எய்திவிட்டார்.

அவர் 1937 39 ல் சென்னை மாநிலத்தில் ரெவன்யூ அமைச்சராகவும், 1946 — 1952 சென்னை சட்ட மன்ற உறுப்பினராகவும், 1946-1947 ல் சென்னை மாநில முதலமைச்சராகவும் இருந்தார்.

1955 ல் ஆந்திர மாநிலம் உருவான போது முதலமைச்சராக இருந்த பெருமை பிரகாசத்தையே சாரும். பிரியும்போது பிரகாசம் சட்டசபை உறுப்பினராகவே பிரிந்திருக்கிறார்.

அவரது மறைவு இணையற்ற பேரிழப்பு அரசியல் உலகிற்கு! அவரது உறவினர்களுக்கும் ஆந்திரத் தோழர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்து கொள்கிறோம். (ஆ-ர்)

தேய்பிறை!

"காந்தி நீறுபூத்த நெருப்பு; அதிலே கொழுந்துவிட்டெரியும் ஜுவாலை ஜவகர். அந்த ஜுவாலை எட்டி நிற்போருக்கு வெளிச்சம் கொடுக்கிறது. கிட்டச் சென்று தட்டிப் பார்ப்போரைச் சுட்டுவிடுகிறது."

"பண்டித மோதிலால் நேரு திரட்டிவைத்த ஏகபுத்திரனை தங்கக்கட்டியை, காந்தியெனும் பொற்கொல்லர், தியாகம் என்னும் தீயிலே வைத்துச்சுட்டு ஜவகர் என்னும் ஆபரணமாக பாரத மாதாவுக்குச் சூட்டிவிட்டார்."

"காந்தியின்றேல் ஜவகர் இல்லை என்றாலும், ஜவகர் இல்லாவிட்டால் காந்திக்கு என்ன பெருமை? காந்தி வித்து என்றால், ஜவகர் அதிலிருந்து வெடித்துக் கிளம்பிய முளை."

"கொள்கை மறவாக் கோமேதகம்! கள்ளமிலாச் செல்லக்கிளி! ஜோதி! சுடர்விளக்கு! மாணிக்கம்! மரகதம்! மனிதகுல மாமேதை!

—அப்பப்பா! எத்தனை இலட்சம் பேர் இவ்வாறு தோத்திரம் செய்தவர்கள்!

இறைவன் இறைவி, இரண்டும் ஒன்றாகி, தாயாய்த் தந்தையாய், சக்தியும் சிவனுமாய் உள்ளொளியாகி உலகெலாம் திகழும் பரும்பொருளே - என எத்தனை லட்சம் பேர் அகவல் பாடியவர்கள்! ஆதிமூலமே! அனைத்தையும் காக்கும் தேவ தேவா! - என்று கன்னத்தில் போட்டுக் கொண்டவர்களை எண்ணமுடியுமா?

அந்தப் புகழ், அந்த பக்தி, அந்த நைவேத்யம் - இவைகளெல்லாம் இப்போது குறைந்து வருகின்றனவே, கரைந்திடக் காண்கிறோமே, காங்கிரசார் இதை உணர்கின்றனரா? மேனி துணுக்குற்று, மெய் வருத்தம் கொள்கின்றனரா? இல்லை. ஆனால் பொதுமக்கள், போதும் இந்தப் புகழ்மாலை என்று தீர்மானித்துவிட்டனர்; 'உறவுக்கு ஒன்பதுபடி, பணத்திற்குப் பத்துப்படி' என்ற உபகதையை நாட்டுப்புறங்களில் சொல்லிக் காண்பிக்கத் தொடங்கிவிட்டனர். கீர்த்தி பெற்ற அந்தத் தலைவர் இவ்வளவு குறுகிய காலத்தில் நாட்டவர் நெஞ்சங்களைவிட்டு விலகுவார் என யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

தமிழ்நாட்டில் அவருக்குக் கருப்புக்கொடி காண்பித்த போது, 'அய்யகோ! தமிழ்நாட்டுக்கு அவமானம்! மானம் போகிறது! நேருஜிக்குக் கருப்புக் கொடி காண்பிக்கிறார்களே! இதெல்லாம் பிரளயம் வரப் போவதற்கு அறிகுறி! நாட்டுக்கு வந்து வாய்த்த நாசகாலர்கள்' என்று எவ்வளவு இழித்துப் பேசமுடியுமோ அவ்வளவும் பேசினார்கள் நயமை! 'முட்டாள்கள்! காட்டுமிராண்டிகள்' என்று அந்தப் 'பெரியவர்' திட்டியதை தங்கத் தாம்பாலத்தில் ஏந்திடத் துடித்தார்கள் இங்கிருந்த காலை'யர்கள்! கருப்புக்கொடி காட்டியது தி. மு. கவினர்தான் என்றாலும் பண்டிதநேருவுக்கு அது ஒரு பிரச்சினையாகவேஇருந்தது. துதிபாடுவோர் மண்டிக்கிடக்கும் துணைக்கண்டத்தில் கருப்புக் கொடி காட்டிடத் துணிந்துவிட்டார்களே என்று கோபம் பண்டிதருக்கு! அந்த மாமேதையின் மதிமுகத்தில் முதற்கரும்புள்ளியை வைத்தவர்களை அவரால் மறக்கமுடியுமா? பார்க்கிறேன் என்றுதான் கர்ஜித்துப் போனார்!

தமிழ்நாட்டில் மட்டுமா எதிர்ப்பு? கேரளத்தில்? கோட்டைச் சுவற்றில் கொட்டை எழுத்தில் எழுதியிருக்கிறார்களே, திரும்பிப் போங்கள் என்று! அதையும் அவர் எண்ணிப்பார்க்காமலில்லை. வரவேற்புகள் மறந்துபோகலாம்; ஆரத்தி எடுத்துத் திலகமிட்ட சம்பவங்கள் நெஞ்சிலே புதையுண்டு போகலாம்; வாழ்த்து வளைவுகளின் வாசகங்கள் நினைவுக்கு வராதிருக்கலாம்; கருப்புக் கொடிகளும், கண்டனக் குரல்

★ தென்னரசு ★

களும், எதிர்ப்புக் கோஷமும், ஏன் வந்தீர் என்ற சொலலம்புகளும் எப்படி மறந்துபோகும்?

அடுத்தாற்போல் அகாலித் தளத்தில் ஒரு எதிர்ப்பு! மேடை வரை ஏறி 'மேன்மை'க்குரிய பண்டிதரைப் பேசவிடாமலே செய்துவிட்டார் அகாலிகளின் முன்னேடி ஒருவர். கனல் கக்கும் கண்களுடன் வெற்றிகரமாக 'வாபஸ்' பெற்றார் பண்டிதநேரு. அதைத் தொடர்ந்து நடந்த பம்பாய்க் கிளர்ச்சி இருக்கிறதே, அந்தக் கிளர்ச்சிதான் நேருவின் நெஞ்சிலே தழும்பாகப் பதிந்துவிட்டது என்றால் அதில் தவறில்லை. ஆலை முதலாளிகளிலிருந்து அங்காடிக் கடைக் கூலிவரை, நேருவைத் தெய்வமெனக் கருதியிருந்த மாகாணத்தில் அவருக்கு அத்தகைய எதிர்ப்பு ஏற்படுமென்று அவர் எதிர்பார்த்திருப்பாரா? 'அண்ணல் காந்திஜியின் போதனைகளை ஐயந்திரிபறக் கற்ற ஐயனே, நீர்தான் எங்களுக்கு வழிகாட்டி' என்றுதான் ஒரு காலத்தில் மராட்டியர் சொன்னார்கள். வாசமலர் சூடி அவரது வர்ணப்படங்களை அழகுபடுத்தி மகிழ்ந்தார்கள். அவர்கள் நேருவின் படத்தை என்ன பாடுபடுத்தினார்கள்! படங்களை உடைத்திருக்கலாம்; கருப்புத்துணி போட்டு மூடியிருக்கலாம்; அப்படியா செய்தார்கள்? செய்யத் தரமற்ற செயலையல்லவா அங்கே செய்துகாட்டினார்கள்? மேதினி கண்ட 'மேதை'க்கு 'மிதியடி' மாலை! கொடுமை! கொடுமை!!

பம்பாயில் கலகம் அரும்புவிட்டுக்கொண்டிருந்த போதே மைசூரில் ஒரு தகராறு ஏற்பட்டது. மாஜி பிரதமர் அனுமந்தையா, மத்திய சர்க்காரை அடிக்கடி கண்டிக்கிறார் என்ற குற்றச்சாட்டு அவர்மீது சாட்டப்பெற்றது தலைமை சர்க்காரைக் கண்டிக்கிறவர்கள் அனைவருமே காங்கிரசுக்கு விரோதிகள் என நிஜலிங்கப்பா குழுவினர் குரல் கிளப்பினர்; நேருப் பண்டிதர் மைசூர் குழப்பத்தை நடுநிலைமையிலிருந்து தீர்க்க முனையவில்லை. அவருடைய தலைமையை அல்லவா அனுமந்தையா எதிர்க்கிறார்! பின் நேரு எப்படி நல்ல தீர்ப்பு வழங்க முனைவார்! விளைவு, அனுமந்தையாவின் ராஜினாமா, மைசூர் மாநிலத்தில் நேருவுக்கிருந்த செல்வாக்கை சோதனைக்குள்ளாக்கியது.

அண்மைக்காலத்தில் நேருவுக்கு எழுந்த எதிர்ப்புகள், மாகாண மககளிடையே மட்டுமல்ல மத்திய சர்க்காரின் அமைச்சரவைக்குள்ளேயே எழுந்தது. பத்திரிகைகள் அதை இருட்டடிப்பு செய்ய நினைத்தன. கூமுட்டை நாற்றத்தை எத்தனை கூடைபோட்டு மூடினால்தான் என்ன?

உ. பி. மாநிலத்தைச் சேர்ந்த கோவிந்த வலலபந்த் 'அவர்களுக்கு' மத்திய மந்திரிசபையில் முக்கியத்துவம் வந்ததுபற்றி சர்ச்சைகள் கிளம்பின. 'யார் இந்த பந்த? எதனால் இவருக்கு இந்த முக்கியத்துவம்? உறவினர் நேருவுக்கு என்பதாலா? உ. பி.யைச் சேர்ந்தவர் என்பதாலா? உள்நாட்டு இலாகாவை எப்படி அவரிடம் ஒப்படைக்கலாம்? அவரைக் காட்டிலும் அனுபவம் பெற்றவர், ஆதிகாலம் தொட்டு காங்கிரசின் வளர்ச்சி, சுதந்திரத்திற்குப் பாடுபட்டவர் - ஆசாத் இருக்கும்போது பந்த் மகுடம் சூட்டப் பெறுவது தகாது" என்று மத்திய சபைக்குள்ளேயே முணுமுணுப்புக் கிளம்பியது. பணக்காரர்கள் புகழுக்காகவும் ஆடம்பரத்திற்காகவும். அவர்களது இல்லத்திலே குவிந்து கிடக்கும் 'பாவப் பணமூட்டை'களில் இரண்டைப் பொது நிலையங்களுக்குச் செலவு செய்துவிட்டால் அவர்களெல்லாம், நாட்டுக் குழைத்த உத்தமர்களாகிவிடுவார்களா - என்று நெஞ்சத் துணிவு கொண்டவர்கள், நேருவின் காதுகளில் ஒலிக்கும்படி கேட்டார்கள். என்ன பதில் சொன்னார் நேரு! பலவீனம் அவரை மௌனியாக்கிவிட்டது. அந்த நேரத்தில்தான் மாஜி நிதியமைச்சர் சிந்தாமணி தேஷ்முக் பகிரங்கமாக ஒரு உண்மையைச் சொன்னார். "மத்திய சர்க்காரில் யாருக்கு, எந்த இலாகா என்ற வரை முறை இல்லாது போய்விட்டது. ஒருவர் துறையில் வேறொருவர் தலையிட்டு, யாருக்கு செல்வாக்கு என்று எடைபோட்டுப் பார்க்கிறார்கள்" என்ற நிதி மந்திரியாரின் கூற்றை இதுவரை பிரதமர் மறுத்துரைக்க முன்வரவில்லை. பந்தின் தலையீட்டால் ஆசாதின் தியாகம் மதிக்கப்படவில்லை என்பதை நாடு உணர்ந்துகொண்டுவிட்டது என்பதை மட்டும் நன்குணர்ந்த பண்டிதர், அவர் இங்கிலாந்து செல்லும் போது,'ஆசாத் நான் வரும்வரை என்னுடைய குறிப்புகளைக் கவனித்து வருவார்' என்று சமாதானத்திற்காகச் சொல்லிவிட்டுப் போனார். அனுபவம் மிகுந்த ஆசாத் இதை மறந்திருக்கமாட்டார். பணமும் பரம்பரைச் செல்வாக்கும் இல்லாததால் அரசியலில் ஏற்படும் தாழ்வுகளை எண்ணி அவர் வருந்தாமலிருக்கமாட்டார். பண்டிதரின் உள்ளத்திலே புதையுண்டு கிடந்த 'தனக்கென்ற நீதி' வல்லபந்த் பிரச்சினையில் தன்னையுமறியாமல் பீறிட்டுக் கிளம்பிவிட்டது. அதன் விளைவுதான்- உறவினர்களுக்கும், உயர்ந்த வாழ்வு நடத்திக்கொண்டிருப்போருக்கும் நேரு காட்டிய சலுகைகளின் எதிரொலிதான் இப்போது உ. பி.யில் நடந்துகொண்டிருக்கும் கிளர்ச்சிகளுக்குக் காரணம் என்றுகூட நினைக்க வழியுண்டு.

மற்ற மாகாணங்களில் நடைபெற்ற கிளர்ச்சிகளைக் கண்டித்தவர்-சுடுமொழி கொட்டியவர். உ. பி.யில் நடைபெற்ற சிலை உடைப்புப் போராட்டத்தைத் துணிந்து கண்டிக்கவில்லை நேரு. 'பதாதீர்கள். படிப்படியாகக் குறைப்போம் அந்நியர் சிலைகளை' என்று மகுடிசானே வாசிக்க முடிந்தது. சிலை உடைத்தது சென்னையாக இருந்தால், சேரன

— 6-ம் பக்கம் —

> “ போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் : அஞ்சேன் !”

எண்ணம்

மலர் 3 || 25-5-57 || இதழ் 36

மே 26! ஒலி பெருகட்டும்!

புதிய வரிகள் விதித்திருப்பது பற்றி நாடெங்கணுமிருந்து எதிர்ப்புகள் கிளம்பியிருக்கின்றன. கொடிகள் கடந்து, கட்சிகள் கடந்து அத்தனைபேரும் மத்திய சர்க்காரின் பட்ஜெட்டைப் பலமாகக் கண்டித்திருக்கிறார்கள். ஆனால் வரி விதித்தவரும், அவருக்கு உறுதுணையாக இருப்பவரும் பொதுமக்களின் குரலை இதுவரை மதித்துப் பேசியதாக எந்தத் தினத்தாள்களிலும் செய்தியைக் காணோம்.

சர்க்காரின் வருமானத்தை உயர்த்த வரி விதிப்பதைத் தவிர வேறு வழியில்லை — என்கிறார் பண்டிதநேரு.

வரி விதித்த டி. டி. கிருஷ்ண மாச்சாரியோ, நான் எத்தகைய வீரப்பணியைப் புரிந்திருக்கிறேன் தெரியுமா? எனக்கு நாள்தோறும் மிரட்டல் கடிதங்கள் குவிகின்றன. வெட்டிவிடுவேன் என்கிறார்கள்; சுட்டுத் தள்ளிவிடுவேன் என்று பயமுறுத்துகிறார்கள். இதற்கெல்லாம் நான் பயந்தவனா?-என்று கருதும் வகையில் மேடைதோறும் பேசி, தனக்கு ஆதரவு தேட முனைகிறார். அரசியலில் எதிர்க் கட்சிக்காரர்களுக்குத்தான் இத்தகைய கடிதங்கள் வரும் என்பார்கள். அவையெல்லாம் அந்தக் கட்சியின் கீர்த்தி வரலாற்றில் இடம் பெறுவதற்கு சாதகமாக இருக்கும். ஆனால் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் - அதுவும் பீடத்தில் அமர்ந்து கொண்டு, ‘இந்தா, பிணிதீரப் பிடிசாம்பல்!’ என அபயம் அளிக்கவேண்டியவர்களுக்கும்இத்தகைமிரட்டல் கடிதங்கள் வருகின்றன என்றால் இதைக் காட்டிலும் ‘மானங்கெட்ட தனம்’ காங்கிரசுக்குத் தேவையில்லை. அந்தக் கடிதங்களை மேடையில் வாசித்துக் காட்டுகிறார்களே, இது அசல் திமிர்வாதம!

வடநாட்டுக்காரர்களுக்குத் தெரியாது, பொதுத் தேர்தலில், தான் தோற்றுப் போவோம் என்று பயந்து டி. டி. கே. என்னென்ன வழிமுறைகளைக் கையாண்டார் தெரியுமா? பரம்பரைக் காங்கிரஸ்காரன் கேள்விப்பட்டால் தற்கொலைகூடச் செய்துகொள்வானே!

“டி. டி. கே. தமிழர்! வடநாட்டிலிருந்துகொண்டு தமிழ்நாட்டுக்குச் சாதகம் தேடிக்கொண்டிருப்பவர். அவர் வெற்றிபெற்றால் தமிழனுக்குப் பெருமை! தமிழ்நாட்டுக்குப் பெருமை!”

—என்று பேசினார்கள். தொலைகிறது, இது எல்லாக் கட்சிக்காரர்களுக்குமுள்ள வாடிக்கை எனத் தள்ளுவோம்!

தி. மு. க. வின் சார்பில் போட்டியிட்ட பி. பாலசுப்ரமணியம் இறந்துவிட்டார் என்றல்லவா பிரச்சாரம் செய்தார்கள்!- இது ராஜதந்திரமாம்! தேர்தல் பிரச்சாரத்தில் இது புது முறையாம்!

வரியைக் குறைப்பேன்; அதைச் செய்வேன்; இதைச் செய்வேன் என்று காலட்சேபம் நடத்தினார். அந்த டி. டி கே. தான் தனக்கு வாக்களித்த மக்களின் கண்களிலே மண்ணடித்து விட்டுக் கைகொட்டி நகைத்துக் கொண்டிருக்கிறார் கருடா நலந்தானா? என்று கேட்ட தாமே கருநாகம், அதைப்போல்! எதிர்க் கட்சியினர்தான் எதிர்ப்பார்கள் என்று ‘மித’மாக இருந்த அவர் உண்மையிலேயே பயப்படும் விதத்தில் காங்கிரஸ்காரர்களும் எதிர்க்கத் தலைப்பட்டுவிட்டார்கள். மக்களிடம் தொடர்பு கொண்டிருந்த காங்கிரஸ்காரர்கள் டி. டி. கே. யின் பட்ஜெட்டைப் பலமாகக் கண்டித்து வருகிறார்கள்.

அரசியலைவிட்டு ஒதுங்கி நிற்கும் சில பெரியவர்கள்கூட ‘இது பயங்கரமான திட்டம்! இதை அனுமதிக்கக்கூடாது என்று புது முழுக்குப் பெற்று முழங்கிடப் பார்க்கிறோம். அந்தப் பெரியவர்கள் சில அடிப்படைத் தவறுகளையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

செலவு வரி விதிப்பதும், எண்ணெய்க்கு எக்சைஸ் வரி விதிப்பதும் மாநில சர்க்காரின் அதிகாரத்தில் சிலவற்றைப் பிடுங்குவதற்கான புதிய உத்தேசங்களாகும்-என்று அரசியல் அனுபவஸ்தர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நகைகளையும் அபகரித்துக் கொண்டு கற்பையும் சூறையாட நினைக்கும் தீவட்டிக் கொள்ளைக்காரர்களைப்போல், வரியையும் வசூலித்து உரிமையையும் கைக்கொள்ள நினைக்கிறார் டி. டி. கே. ஏற்கனவே அதிகாரங்களை இழந்து நிற்கும் தமிழகம் இதைச் சகித்துக்கொள்ளப் போவதில்லை. தமிழ் மக்களின் பேரியக்கமாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகம் டி. டி. கே. யின் பட்ஜெட்டைப் பலமாகக் கண்டிக்கிறது. அதற்குரிய நாளாக மே 26ம் தேதியை தி. மு. க. தேர்ந்தெடுத்திருக்கிறது. அன்றைய தினம் நாடெங்கிலுமுள்ள தி. மு க. கிளைகள் பட்ஜெட்டைக் கண்டித்துப் பொதுக் கூட்டங்கள் நடத்த இருக்கின்றன. தீர்மானங்க நிறைவேற்றி விட்டு அரசியலாரின் கவனத்திற்கு அனுப்பிவைக்க இருக்கிறார்கள் கழகத் தோழர்கள்.

இதுவரை தி. மு. க. மக்கள் பிரச்சினையில் தலையிடத் தவறியதுமில்லை, ஆய்ந்து முடிவுகட்டி செயலில் இறங்கிய பிறகு அந்தப் பணி தோல்வி கண்டதுமில்லை. அந்த நம்பிக்கையில் நாம் பட்ஜெட்டைக் கண்டிக்கிறோம். சர்வகட்சித் தோழர்களும் இதில் தங்கள் பங்கினைத் தனித்தனியாகச் செலுத்தத் தடையில்லை. காரணம் இது கட்சிப் பிரச்சினையல்ல!

பட்ஜெட்டை எதிர்க்கும் காங்கிரஸ் உறுப்பினர்கள் அயராது பாடுபட்டால் பட்ஜெட்டை உடைத்துவிட முடியும். பேச்சும் பேசிவிட்டு, கைதூக்கும்போது ‘கட்சிக் கட்டுப்பாடு’ என்று ‘சாய்ந்து’விடக்கூடாது. கருத்துக்குச் சுதந்திரமில்லாத கட்சி என்ன கட்சி! காங்கிரஸ் தோழர்களே பட்ஜெட்டை முறியடியுங்கள்!

வெளியிலே கழகம் இருக்கிறது! மே 26 ல் முழங்க இருக்கிறது! பொதுச் செயலாளர் அறிக்கை விடுத்திருக்கிறார். அன்றுதான் பட்ஜெட் கண்டன நாள்! ஒலிபெருகட்டும்! பட்ஜெட் கொடுமை ஒழியட்டும்! ★

புதுவரிகள் கண்டன நாள்

26-5-57 ஞாயிறன்று நாடெங்கும் எதிர்த்து முரசறைவீர்!

26-5-57 ஞாயிற்றுக்கிழமையை, புதிய வரிகள் விதிப்பிற்கு நாடெங்கும் கண்டனம் தெரிவிக்கும் நாளாகக் கொண்டு, ஆங்காங்கு அமைதியான முறையில், ஊர் வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்தி மக்களின் எதிர்ப்புக் குரலை, தீர்மானங்கள் மூலம் காட்டி, இந்தியப் பேரரசினரும், சென்னை அரசினரும் உணரும்படி ஆவனவெல்லாம் செய்ய முன்வருமாறு தி. மு. கழகத் தோழர்களையும், பொதுமக்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. க.

வாழ்வு எங்கே ?

தி. மு. கழகம் தவிர, காங்கிரசுக்கு எதிர்க்கட்சிகளாக இயங்கும் பிற கட்சிகள் அனைத்தும் தங்களைக் காங்கிரசின் மறுபதிப்பு என்று சொல்லிக் கொள்வதில் தயங்குவதே இல்லை.

காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் நிறைந்துள்ள பகுதிகளுக்குப் போனால், ‘எங்களுக்கும் காங்கிரசுக்கும் அடிப்படையிலே மாறுபாடு இருக்கிறது’ என்பார்கள். காங்கிரசுக்கு நேரடியான எதிர்க்கட்சி நாங்கள்தான் என்பார்கள்.

காங்கிரஸ் ஆதரவாளர்கள் பகுதிக்குப் போனால் அங்கே மட்டும் அவர்களின் தொனி மாறுகிறது.

“காங்கிரசிலே பதவிப்பித்தர்கள் நிறைந்து விட்டார்கள். ஆகவேதான் நாங்கள் பிரிந்து வந்து விட்டோம்; காந்தியம் எங்களிடம்தானிருக்கிறது; உண்மைத் தொண்டர்கள் நாங்கள் தான்” என்று பேசுகிறார்கள்.

சோஷியலிஸ்டுகள், பிரஜா சோஷியலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் இந்த மூன்று குழாத்தினரும் நெடுநாட்களாக —இந்த ‘பாண’த்தையே தொடுத்து வருகிறார்கள்.

தமிழகத்திற்கு வந்த கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாட் அவர்கள், பல இடங்களில் பல நல்ல திட்டங்களைப் பற்றிப் பேசினார். புதுமையாகக் கூட இருந்தது. ஆனால் சென்னையில் பேசும்போது மட்டும் தன்னை ஒரு காந்தியவாதியாக மனதிலே எண்ணிக்கொண்டே பேசினார். காங்கிரசின் எதிர்க்கட்சி என்று எண்ணித்தான், கேரள மக்கள் நம்பூதிரி குழுவினரை வரவேற்றனரே தவிர, உண்மையான காங்கிரஸ்வாதி என்று எண்ணியல்ல!

கம்யூனிஸ்டுகள் ஒன்றும் புதியவர்களல்ல! காங்கிரஸ் சொன்னதைச் செயலில் காட்டுகிறவர்கள் கம்யூனிஸ்டுகள்—என்பதாகப் பேசினார் தோழர் பாட்.

கம்யூனிஸ்டுகள் என்றால் ஒரு பலம் பொருந்திய எதிர்க் கொள்கையினர் என்று மக்கள் மத்தியில் நம்பூதிரியவர்களால் மெய்ப்பிக்க முடியாது போனது வருந்தத்தக்கதாகும். அதற்கு நம்பூதிரி முழுப் பொறுப்பாளியாகமாட்டார். அவரது கட்சி, மக்களின் உள்ளங்களைத் தெளிவுபடுத்தும் அறிவு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எல்லாம் புரட்சி, வாழ்வும் தாழ்வும் இருப்புப் பெட்டிக்குள்ளேயேதான் இருக்கின்றன என்று எண்ணியுள்ளதின் விளைவு அது! வாழ்வு அங்கேயா இருக்கிறது? ★

பொன்னங் கழல் போற்றி !

நந்தமிழ் மண்ணிலே, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே ஆரிய மதக் கோட்பாடுகள் தமிழர் சமுதாயத்தில் சிறிது சிறிதாகப் புகுத்தப்பட்டன என்பதற்கு, நம்மிடையேயுள்ள சங்க ஏடுகளே தகுந்த சான்றுகளாகும்! சங்ககால இறுதிக்குப்பின் தமிழகத்திலே தலைதூக்கிய 'களப்பிரர்' ஆட்சி, தமிழர் சமுதாயத்தின் கொள்கை, கோட்பாடுகளின்மேல் ஆரிய முலாம் பூசும் வேலையில் ஈடுபட்டதேயன்றி, உலகுக்கே நாகரிகம் செப்பிய இணையற்ற தமிழர் சமுதாய நெறியின்மேல் குறைந்த அளவு படிந்துள்ள அந்நாளைய மாசைத் துடைக்கவும் முயலவில்லை!

பின்னர் உருவாகி, ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகளுக்குத் தமிழர் அரசாட்சியைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்திவந்த பல்லவ இனம் சிறுகச் சிறுகத் தமிழர் சமுதாய வாழ்க்கை முறையையும், நெறியையும் அடியோடு மாற்றத் துவங்கியது. ஓங்கி உயர்ந்த ஆலயங்களுக்கும், மண்ணையும், பொன்னையும், மலர் நிகர் பெண்ணையும் ஏகபோக உரிமையாக்கிக் கொண்டு அனுபவித்து வந்த மடாலயங்களுக்கும், கடவுளரின் திருநாமத்தை வாய் வலிக்கப் பாடும் பஜனைக் கூட்டங்களுக்கும், 'அவன்' புகழ்பாடும் இலக்கியங்களுக்கும் அளப்பரிய புகழ் விளைந்ததே இப்பல்லவர்கள் காலத்திலேதான்!

தமிழரிடையே 'மறுமலர்ச்சி' எனும் திரைமறைவிலே சிற்பக்கலை, ஆடல், பாடல், இலக்கியம் ஆகிய அத்தனை துறைகளிலும் புதுமையைப் புகுத்தினர்! புதுமை அக்காலத் தமிழர் பல்லோருக்கு இன்பம் பயத்ததெனினும், அது தமிழர் சமுதாய மண்ணிலே ஆரியத்தரு வளர விடுமுன் கலந்து விடப்படும், நல்லதோர் உரம் என்கிற உண்மை நிலையை அந்நாளிலேயே சிலர் உணர்ந்திருந்தனர். எனினும் அவர்கள் பால் உருவான எழுச்சியை அழித்தொழித்தனர் சூழ்ச்சியின் திறத்தால்!

தமிழகத்திலே மௌடீகம் நிறைந்து வளர்கிறது என்பதைக் கண்ணுற்ற பிற சமயத்தவர், அதிலும் குறிப்பாக அந்நேரத்திலே, அந்தக் கால சூழ்நிலைக்குத் தக்கவாறு உருவாகி, பகுத்தறிவுக் கொள்கைகள் ஒளி விட்டுக்கொண்டிருந்த சமயங்களிலே ஒன்றான சமண சமயத்தினர் தம் அறவுப் பிரச்சாரத்தைத் துவக்கினர் புயல் வேகத்தில்!

அது காலைதான், சைவமும் சமணமும் பலமாக மோதிற்றெனலாம்! அறிவு, ஆற்றல், அஞ்சாமை, வாதம்-பிரதிவாதம் ஆகியவைகளில், ஈடு, இணையற்று விளங்கிய சமணர்களின் முன்னிலையிலே 'சைவம்', சட சடவென வீழ ஆரம்பித்தது! அது போதுதான் 'அன்பே சிவம்' எனும் மூலாதாரக் கொள்கையைக் காலிலே போட்டு மிதித்து வெறிபிடித்து ஆட ஆரம்பத்தனர் சைவப் பெருந்தகையாளர்கள்! வாதிடத் திறமையற்ற இந்த நெறி கெட்டவர்கள் சூழ்ச்சியின் திறத்தால் அறிவுச்சுடர்களை அணைத்தனர்! உதட்டிலே 'கொல்லாமை' பற்றிய தாரக மந்திரம் தாங்கி, கரத்திலே கூரிய வாளும், வேலும் ஏந்தி, சமணர்களின் தலையை வெட்டிச் சாய்த்தனர்! அவர்கள் தங்குமடங்கள், கலைக்கூடம், கல்விக்கூடம் இன்ன பிறவற்றிற்கெல்லாம் தீ மூட்டி அழித்தனர். எண்ணாயிரம் சமணர்களின் உயிர்களைத் துடிக்கத் துடிக்கக் கழுவிலேற்றிக்கொன்று மகிழ்ந்த இந்த ஈனர்களின் நிலையை வரலாறு பொறித்துக்கொண்டதும், வையகம் அறிந்துகொண்டதும் அது போதுதான்!

இடைக்காலத்திலே உயிர்களைக் கொன்று, வெறியாட்டம் ஆடி ஓய்ந்த வீரசைவம், பிற்பட்ட காலத்திலே வெளிப்படையாக அதுபோல் எதுவும் செய்து விடவில்லையெனினும், அந்நாளைய அவ்வெறியர்களின் தாள் போற்றி பணிந்து கிடந்திருக்கிறார்கள் என்பதை இலக்கியங்கள் மூலம் நாம் தெளிவாகக் கண்டுகொள்ள இயலும்!

பல்லவர்கள் காலத்திலே வெறியாட்டம் ஆடிய இவ் வீரசைவர்களின் நிலை ஒருபுறமிருக்க, அவர்கள் காலத்திலேயே ஆண்டவன் குடிகொண்டிருக்கிற ஆலயங்களும் அவர்தம் அடியார்கள் குடிகொண்டிருக்கிற மடாலயங்களும் எந்த நிலையிலே இருந்துவந்தன என்பதைச் சற்றே ஆராய எண்ணினால்... ஆம்! வரலாறுகளும், இலக்கியங்களின் பொன்னான ஏடுகளும் நம் மனக்கண் முன்னே தானாகத் திரும்புகின்றன!

ஓய்விலாக நடம்புரிந்துகொண்டிருந்தாள் அவ்விளமகள்!

எதிரிலே குழுமியிருப்பவர்களின் உள்ளங்களிலே 'உறுதி' தளர்ந்துவிட்டது மாத்திரமின்றி, உணர்ச்சிக் காவியங்களே பெருமூச்சுகளாக வெளிவந்துகொண்டிருந்தன!

அழகு மேடையின் கண் அம்பலத்தில் நடம்புரிபவர்கள் அரசர் மகளாய் இருந்தாலும், ஆலயத்தின் பணிக்கென விடப்பட்ட 'தேவரடியார்'களிலே ஒரு ஆரணங்காய் இருந்தாலும், கலையிலே நாட்டம் மிகுந்த பொது மகளிரிலே ஒருத்தியாயிருப்பினும்; ஆடல்புரிபவர்கள் ஆண்டவனையே எண்ணியெண்ணி ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி, அன்பினால் உளம் உருகி, விழி சொரியும் நீரால் எழுதிய மை அழிந்து, வடியும் வியர்வையினால் ஒளி வீசும் பிறை நெற்றியிலே விளங்கும் பொட்டழிந்து, தங்களையே மறந்துவிட்ட நிலையிலும் எதிரிலே குழுமியிருந்து பார்ப்பவர்களின் எண்ணம் இகழ்ச்சிக்குரியதுதான்! இலக்கியங்களிலே சான்றுகள் ஏராளம்!

❁ "வையையார் கோமான்" ❁

...ஓங்கி வளர்ந்ததோர் ஆலயம்—அங்கே சித்திர வேலைப்பாடு மிகுந்த கற்றூண்களிடையே உயர்ந்துவிளங்கும் அழகு மேடையின் கண் கொடியன்ன ஒரு தங்கப்பாவை! மென்மலர்க் கரந்தனிலே இசை வழங்கும் ஒளி அணிகள்; நெளியும் தளிரிடையினிலே மின்னும் மென் துகில் நழுவும் நிலை! வாருயர் பெண்ணை வருகுரும்பை வாய்ந்தனபோல் அமைந்து குலுங்கிக் களிக்கும் இளங்கொங்கைகள்! அதை இறுகத்தழுவி, அழகு கூட்டி எழுச்சிக்கு வித்தூன்றும் பொற்கச்சு! வெட்டிய பாக்குமரத்துண்டு நிகர்தங்கக் கழுத்து, அதைச் சுற்றி மலர்க்கொங்கையை மருவ அலையும் ஆழ்கடல் முத்துக்கோர்த்த நீண்ட சரம்! நெற்றிப்பிறை கண்டு கூம்பிய அழகுத் தாமரையினுள்ளே தவிக்கும் இரு கருவண்டுகள்! தண்டுக்கால்களிலே 'வா'வென வேண்டும் பொற்பாதச் சிலம்பின் இசை முழங்க, குயிலினுமினிய குரலால் இசைபாடி, ஆடும் பூங்கொடியன்ன சிற்றிடை துவள

ஆலயங்களின் பணிக்கென அணங்குகளை நியமித்து, அழகு மிக்க. அவ்வாரணங்குகளை அம்பலத்திலே ஆடவிட்டு 'ஆடற்கலை'யை வளர்த்த பெருமையும் தமிழக வரலாற்றிலே தமிழரினமல்லாத 'பல்லவரை'யே சாரும்! அந்த நாளிலிருந்தே அவர்கள் 'தேவரடியார்'கள் என்றே அழைக்கப்பட்டு வந்தனர். ஆலயங்களிலே பலரறிய ஆடல்புரிந்தவர்களில், அகவொழுக்கம் குறைந்த 'பொது மகளிரே' முக்கியமானவர்கள்! ஆம்! அவர்களே அந்நாளைய தேவரடியார்கள்!

அரண்மனைகளிலே உயர்ந்த நிலையிலே இருந்துகொண்டு, கொலு மண்டபத்திலே ஆடல்புரிந்த எழில் கொண்ட நடன நங்கையர்கூட, அரசவையிலே உயர்ந்த அந்தஸ்திலே இருப்போரின் இச்சையைத் தணிக்கும் மலிவுப் பதுமைகளாகக் காட்சியளித்தனர் எனில் மிகையாகாது!

ஆலயங்களிலேயுள்ள குருமார்களோடும், மடாலயங்களிலே உள்ள மடாதிபதிகளோடும், ஆங்காங்கே தொண்டு புரிந்துவந்த கட்டழகு வாய்ந்த கன்னிப்பெண்களான இத்தேவரடியார்களின் வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்த்தால்... உலகமெலாம் சுற்றியபின் ஓய்வு கொள்ள, போகக் கலை பயின்ற எகிப்து நாட்டுத் தளிர் மங்கைகளின் மேனிகளிலே தஞ்சம் புகுந்த, அந்நாளைய வணிகர்கள் வாழ்வைவிடச் சுவை பயக்கும்!

இங்ஙனம் தமிழகத்திலே மௌடீகம் பரவுவதற்குக் காரணமான வெறிகொண்ட சைவமும், சைவத்தைக் காப்பாற்ற அரும்பாடு பட்டுக் கொண்டிருந்த ஆலயங்களிலேயும், மடாலயங்களிலேயும் விளங்கிய அடியார்களைப் பற்றிய ஒரு சத்து நிறை சுவைக் கவிதையைக் காண்போம்!

பாடலை இயற்றியவர் ஒரு கவிஞர் மாத்திரமல்ல, பழுத்ததொரு வீரசைவர்! வாலிப மிடுக்கோடு இருந்த நேரத்தில் 'திருமணம்' செய்து கொள்ளுமாறு அவரை அண்டிப் பிறர் கேட்டபோது...

"சேய்கொண்டா ருங்கமலச்
செம்மலுடனே யரவப்
பாய்கொண்டா னும்பணியும்
பட்டீச் சுரத்தானே
நோய்கொண்டா
லுங்கொளலாம்
நூறுவய தளவிருந்து
பேய்கொண்டா லுங்கொளலாம்
பெண்கொள்ளல் ஆகாதே"

எனும் ஒரு பாடலையே பாடிக் காட்டித் தாய்க்குலத்தையே அவமானப்படுத்தித் தன் இசைவின்மையை வெளிப்படுத்தினராம், ஒரு தாயின் வயிற்றிலே பிறந்த இந்தப் பற்றேதும் அற்ற பிள்ளை! இன்றைய ஆத்திகர்களின் மனதிலே நிலையானதோர் இடம் பெற்றுவிட்ட வீரசைவப் பெருந்தகையாளர் இவர்; 'கொல்லாமை' எனும் கொள்கையை இறுகப் பற்றி 'அன்பே சிவம்' எனும் மூலமந்திரத்தை முணு முணுக்கும் இந்த வேடதாரிகளின் வெறிச் செய்கையை விளக்கும் அந்தக் கவிதைக் கனியைப் பிழியும்போது, அதனின்றும் வழியும் சுவைமிகு சாற்றினிலே உள்ள சத்து, இதோ...

அது ஒரு மடாலயம் மதத்தைக் காக்கவிருக்கும் புனித ஸ்தாபனம்! மாமன்னர்களும் பணிவு காட்டி அனுமதியோடு உட்புக வேண்டிய சக்தி குடிகொண்ட ஒரு திரு இடம்! அந்த மடாலயத்திலே, உமையொருபாகனின் அடியார்கள் அன்றாடம் காலையிலே களைந்தெறிந்த ஆடைகளை அருவிக்கு எடுத்துச் சென்று, மாசுபோக்கித் தூய்மைப்படுத்திக் கொண்டு வர ஒரு பணியாள் இருந்து வந்தான்!

ஒரு நாள்—அடியார்கள் வழக்கம் போல் களைந்தெறிந்த ஆடைகளைத் தாங்கியவண்ணம் அருவியை நோக்கி விரைந்துகொண்டிருந்தான் அந்தப் பணிமகன்! அப்போது அவ்வழியிலே எதிர்ப்பட்ட தீண்டத்தகாதவன் ஒருவனால் எவ்வாறோ அந்தப் பணிமகன் தாங்கிச் சென்ற அடியார்களின் ஆடைகள் சிறிதளவு தீண்டப்பட்டுவிடுகின்றன. அறியாமையால் செய்த அத்தீண்டத்தகாதவனை வெறுங்கோபத்தைக் காட்டி மன்னித்துவிட இயலவில்லை, சைவத்தை உறுதியாகப் பற்றியிருக்கும் அந்தத் தூய மடத்தின் பணியாளனான அத்திருமகனுக்கு! உடனே அடங்கவொண்ணா சினம் கொண்டு, தன் கரத்திலே இருந்த நீண்ட கூரிய வாளால் அவ்வேழைமகன் அழுது கதறக் கதற வெட்டிக் கொன்று விடுகிறான்!

— 7-ம் பக்கம் —



14-5-57 அன்று நடைபெற்ற புதுக்கோட்டை பஞ்சாயத்துக் கோர்ட் தேர்தலில் தோழர் ஏ. கே. பழனிச்சாமி அவர்கள் வெற்றி பெற்று உறுப்பினரானார். தோழர் பழனிச்சாமி அவர்கள் தி. மு. கழகத்தில் நீங்காப் பற்றுக் கொண்டவர்.

தேய்பிறை !...

— 3ம் பக்கத் தொடர்ச்சி —

மாக இருந்தால் டில்லியிலே 'ருத்ரதாண்டவம்' அல்லவா நடந்து முடிந்திருக்கும்!

பொதுத் தேர்தலுக்கு முன்பு வரை, பண்டித நேரு மாணவர்களைப்பற்றிக் கொண்டிருந்த தவருன எண்ணம், வாலிபர் உலகில் அவருக்கிருந்த பெரு மதிப்பை அறவே அழித்துவிட்டதெனலாம்.

மாணவர்கள் நடத்திய கிளர்ச்சிகளையெல்லாம் பண்டித நேரு ஆராய்ந்து பார்க்காமலே தீச்சொற்களை வீசியெறிந்தார். காலிகள் என்ருர். படித்த முட்டாள்கள் என்று கடிந்துரைத்தார். போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தின்போது ஏதும் கூறிடாமல், ஏகாந்தம் தேடி எங்கோ மலைப்பிரதேசத்திற்குப் போய்விட்டார். அப்போது அவர் கையாண்ட 'மாமியார் தர்மம்'த்தின் தண்டனையை அவரால் பிற்காலத்தில்தான் அனுபவிக்க முடிந்தது. இப்போது சொல்கிருர் 'காங்கிரஸ் மாணவர்களின் தொடர்பை இழந்துவிட்டது'' என்பதாக. மாணவர்கள் அரசியலுக்குள் நுழையக்கூடாது என்ற நேருவின் அனுபவம் சார்ந்த பேருரைதான் இது! காங்கிரசிலே பற்றுக்கொண்டவர்கள் நீங்கலாக மற்ற மாணவர்கள் 'துஷ்டர்கள்' என்றல்லவா அவர் முடிவு கட்டியிருந்தார்!

நேரு அவருடைய வாழ்நாளில் பல இடங்களில் தவறை உணர்ந்திருந்தாலும். முன் கோபத்தின் 'திருவினை'களை கண்டறிந்திருந்தாலும், அந்த மெய்யுணர்வை அவர் வெளிப்படையாகச் சொல்லிக்கொண்டதில்லை. காரணம்; கற்ற கல்வியை - மேதா விலாசத்தை - முற்போக்கு எண்ணத்தை குணதோஷத்திடம் தோல்வியுற வைத்தவர்களில் பிரதமர் நேருவும் ஒருவராகிவிட்டார். பெரிய குடும்பத்தில் பிறந்தவர்; செல்வத்தில் மிதந்தவர்; தொட்டில் பருவகாலம் முதல் அலட்சியமும் இறுமாப்பும் அவருக்கு இருந்துவந்திருக்கின்றன. அவரா தவறை உணர்ந்து வெளியில் பேசிக் காட்டுவார் என அனைவரும் எண்ணுவர்! ஆனல் மாணவர்கள் பற்றிய சிக்கலில் மட்டும் அவரே உணர்ந்து கட்சிக் கூட்டத்திலேயே சொல்லிவிட்டார். இது நேருவின் வாழ்விலேயே இந்த நிகழ்ச்சி அதிசய நிகழ்ச்சி!

பெரிய மனிதர்கள், தாங்கள் இழைக்கும் தவறுகளுக்கான காரணங்களை எண்ணிப்பார்க்க மறுத்து விடுகிருர்கள். அத்தகைய குற்றவாளிகளில் நேருதான் மிக முக்கியமானவர். அவருடைய வாழ்வில், வீம்புதான் அவரைப் பல இடங்களில் கவிழ்த்திருக்கிறது. சர்ச்சில் அரசியல் நிபுணர் என்றும், அட்லி யோக்கியர் என்றும், உதாரணத்திற்கு எடுத்துக்காட்டும் பெரிய மனிதர்கள், அத்தகைய பெரிய மனிதர்கள், இப்போது, இருக்கும் இடம் தெரியாதிருக்கிருர்களே என்னகாரணம்என்பதைத் தெரிந்துகொள்ள முற்படுவதில்லை. புகழ்தான் தெரிகிறதேயன்றி, அந்தப் புகழ் ஏன் கரைகிறது என்பது அவர்களுக்குப் புலனுவதில்லை. அதற்கு, சுக்ர திசை தீர்ந்துவிட்டது என்று வேதாந்திகள் காரணம் சொல்வார்கள். அரசியல் வாதிகளும் அதுதான் காரணம் என்று சொன்னல், அவர்கள் ஆஸ்ரம வாசிகளாய் ஆரண்யத்தில வாழ வேண்டியவர்களாவார்கள்.

பண்டித நேருவுக்கு உள்நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்புகளுக்கெல்லாம் காரணம் என்ன என்பதை அவர் கண்டுபிடித்திருந்தாலும், அவர் ஏன் அதற்கான பிராயச்சித்தத்தைத் தேடிக்கொள்ளவில்லை? வெளிநாட்டு வரவேற்புகளும், சிறப்புரைகளும்தான் அவரைத் தலைகுனியச் செய்ய மறுத்துவிட்டன என்பதையாரும் மறுக்கமாட்டார்கள். அந்தப் புகழ் நேருவுக்கு எப்படிக் கிடைத்தது? மோதிலால் மைந்தர் என்பதாலேயா? மேல்நாட்டில் கல்வி கற்ருர் என்பதாலேயா? மன்னர் குடும்பகளோடு தொடர்பு கொண்டிருந்தார் என்பதற்காகவா? எத்தனையோபேர் மேல்நாட்டில் படித்து வருகிருர்கள்; சொகுசாக வாழ்கிருர்கள்; சூதாடிகளுக்குக்கூடத்தான் பக்கிம்ஹாம் அரண்மனையில் விருந்து நடைபெறுகிறது; அவர்களுக்கெல்லாம் இல்லாத செல்வாக்கு நேருவுக்கு இருக்கிறதென்ருல், அந்த செல்வாக்கு இந்தியத் துணைக்கண்டத்து மக்களின் தலைவர், மிகப் பெரிய ஜன சமுதாயத்தின் முன்னேடி என்பதால் மட்டுமே தரப்படுகிறது என்பதை நேரு உணரவில்லை. தனது சொந்தத் தகுதிக்குத் தரப்பட்டதாகவே அவர் நினைத்ததின் 'லாபத் தொகை' தான் உள்நாட்டிலேயே அவருக்கு எதிர்ப்புக் கிளம்பியதற்குக் காரணமாகும்.

யார் யார் ஒரு காலத்தில், 'நேருவே! மகாமேருவே! வருக! வருக!, என்று அழைத்தனரோ அவர்களே இப்போது நேருவின் வெளிநாட்டுக் கொள்கை 'புஷ்வானம்' என்று பேசும் அளவுக்கு வந்துவிட்டார்கள். நேருவும், கிருஷ்ணமேனனும் ஒன்றுதான் என்று முகஸ்துதி பாடியவர்கள், கிருஷ்ணமேனன் எங்கள் நாட்டுக்கு வரவேண்டாம்' என பகிரங்கமாகச் சொல்லத் தலைப்பட்டுவிட்டனர். பிரிட்டன் நாட்டுப் பெரியவர்கள் சபையில், 'நேருவைக் காட்டிலும் கிருஷ்ணமேனன் ஆபத்தானவர்' என்று வெளிப்படையாகப் பேசுகிருர்கள். காஷ்மீர் பிரச்சினையில் நேருவின் 'யோசனை'கள் தூக்கியெறியப்பட்டுவிட்டன. தன்னுடைய வாழ்நாளிலே இப்படியொரு திருப்புமுனை ஏற்படுமென நேரு எண்ணியிருக்கமாட்டார். 'சகபாடிகள்' என்று நேரு எண்ணியிருந்த பிரிட்டனும் அமெரிக்காவும், நேருவை ரஷ்யாவின் கூட்டாளி என்று கருதத் தொடங்கிவிட்டன. ஆனல் ரஷ்யாவோ, 'நேருவின் பெருந்தன்மை உபதேசமும், புஞ்சசீலமும் பாரதநாட்டின் பல வீனத்தை மறைக்கும் அரசியல் போர்வை எனக் கருதுகிறது.

ஒரு காலத்தில் வெளிநாட்டுப் புகழில் மயங்கி உள்நாட்டை அலட்சியம் செய்தவர், இப்போது வெளிநாடடு அதிர்ப்தியை எண்ணி உள்நாட்டில் சீறிப் பாய்கிருர். காஷ்மீர் பிரச்சினைக்குக் காட்டுகிற அக்கரையில், பத்தில் ஒரு மடங்குகூட இலங்கைத் தமிழர் பிரச்சினையில காட்ட மறுக்கிருர். நேருவின் தாசர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்வதிலே பெருமைகொண்டிருந்த இலங்கைத் தமிழ்த்தலைவர்கள்கூட, நேருவின் கூட்டத்திற்குப் போகாதீர்கள்; பகிஷ்கரியுங்கள்-என்று துண்டு விளம்பரம் செய்யும அளவுக்கு நிலைமை முற்றிவிட்டது. ஆனல் நேருப் பண்டிதரோ, 'விஷமிகள்' 'பைத்தியக்காரர்கள்' என்ற வார்த்தைகளை இன்னும் மறக்காமலிருக்கிருர்.

இத்தனைக்கும் காரணம், வெளிநாட்டு ஜனநாயகத்தை மதிக்கும் அவர், அந்த வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்த ஜனநாயகத்தை சொந்த நாட்டில் மதிப்பதில்லை. தன்னுடைய சொந்த கௌரவத்தோடு, நாட்டின் ஜனநாயகத்தை ஒப்பிட்டுப் பார்ப்பதிலே காலத்தைக் கழிக்கும் கற்பன வாதியாகவே அவர் இருக்கிருர். மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களை கவர்னராக்குதல், நண்பர்களுக்குத் தனிச் சலுகைகள் கொடுத்தல், முன்ஷிக்கும், மொரார்ஜீ தேசாய்க்கும் காரணமில்லாமல் முக்கியத்துவம் கொடுத்தல், தன்னை மிஞ்சுவோரை அரசியலை விட்டும் விரட்ட நினைக்கும் 'சீசரிசம்,' தனக்காக மக்கள் பிரச்சினைகளை மதிக்காதிருத்தல், தேசீய ஒற்றுமைச்கும்க லாச்சார விடுதலைக்குமுள்ள வேறுபாட்டைப் புரிந்துகொண்டு காரியமாற்ற மறுத்தல், மைனுரிடிகளை அலட்சியம் செய்தல், வெளித் தோற்றங் கண்டு மயங்குதல் - இத்தனை தவறுகளுக்கும் நேருவே காரணமாக இருப்பதின் விளைவாக அவருக்குக் கிடைத்த 'அரசியல் கொள் முதல்' தான் இப்போது எங்கெணும் முளைவிட்டிருக்கும் எதிர்ப்புகளாகும்!

புகழ்ந்தவர்கள் பொறுமி நிற்கிருர்கள். பாதம் தொடக்காத்து நின்றவர்கள் 'நேரு தானே' என்கிருர்கள். அவருக்கிருந்த செல்வாக்கையும், இப்போது அவருக்கு ஏற்பட்டிருக்கும் 'தேய்பிறை' காலத்தையும் எண்ணிப் பார்க்கும்போது பெருந்தன்மை மிக்கவர்கள் பரிதாபப்படுகிருர்கள். அவர்களால் வேறென்ன செய்ய முடியும? ★

இலங்கை கம்யூனிஸ்டுகளுக்கு இராசதுரை எம். பி. அறைகூவல்!

"ருஷிய சுயாதிபத்யம் பெற ஒன்று சேர்ந்து போராடிய போலந்து, பின்லாந்து மக்கள் ருஷிய சுயாதீனத்தில் இருக்க விரும்பாது கிளர்ச்சி செய்தபோது ருஷியக் கம்யூனிஸ்டுகள் அந்நாட்டின் சுயாதிபத்ய உரிமையை அங்கீகரித்து அந்நாடுகளைப் பிரிந்துபோக அனுமதித்தார்கள். இலங்கைத் தமிழரின் சுதந்திரத்திற்காகப் போராடிய நாம், சுதந்திரம் பெற்ற பின்பு ஒரு சமஷ்டி ஆட்சியை நிறுவ வேண்டும் என்று கூறினல் இங்குள்ள கம்யூனிஸ்டுகள், அது வகுப்பு வாதம் என்கிருர்கள்.

"நாம் நமக்கொரு தாயகம் வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்டோம். இது வகுப்பு வாதமா என்பதை இலங்கைக் கம்யூனிஸ்டுகள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

"சீன நாட்டில் மாசேதுங் தலைமையில் நடைபெற்றதேசீய விடுதலைப் புரட்சியின்போது 'ஒரே உலகம்' என்ற நூலை எழுதிய வெண்டல் வெல்கி, மாசேதுங்கிடம் சென்று உங்களது அரசியல் கொள்கை என்ன-என்றுகேட்டார். அதற்கு மாசேதுங், 'முதலில் சீன நாட்டின் விடுதலை; பின்புதான் சுபிட்சத்தைப் பற்றியது' என்று சொன்னர். இதை கம்யூனிஸ்டுகள் அறிவார்களாக!

"மக்கள் முற்போக்கு சர்க்கார் என்று இலங்கை கம்யூனிஸ்டுகள், சர்க்காரை ஆதரிக்கிருர்கள். இவர்கள்தான் கடந்த சுதந்திர தினக கொண்டாட்டத்தை சிங்கக்கொடி ஏற்றி கொழும்பிலே விழாக் கொண்டாடினர்கள். இவர்களை மக்கள் எப்படி நம்புவார்கள்?

"நமது மனைவி மக்களோடு பேசும்போதுகூட நிபந்தனைகள் விதிக்கும் பண்டார நாயகா சர்க்காரை முறியடிக்க காலம் பிடிக்காது. மலைநாட்டுத் தமிழ் மக்களும் இலங்கைத் தமிழரசுக் கோரிக்கைமீது நம்பிக்கை வைத்தான பிறகு நாம் சளைக்கத் தேவை இல்லை. திரள்வோம்!" ★

பொன்னங் கழல்...

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

சைவமதத்தைக் கட்டிக் காக்கும் அந்தத் திருமடத்துப் பணியாள் யாரோ ஒருவனைத் தன் கைவாளால் வெட்டிக் கொன்றுவிட்ட செய்தி அந்த மண்ணையாளும் மன்னவன் காதுகளுக்கு எட்டிற்று! நெறி பிறழாது நீதி வழங்குவது செங்கோலினைப் பற்றியிருக்கும் ஒரு வேந்தனின் கடமையாதலால் சில வீரர்களை விரைந்தனுப்பி அந்தப் பணியாளனை இழுத்து வருமாறு கட்டளையிடுகிறுன். அந்தப் பணிமகன்தான் எத்துணை மனவலிவும், உடல்வலிவும் பெற்றிருந்தானே...? தன்னைப் பிடிக்க வந்த அவ்வீரர்களையும் தன் கைவாளால் சின்ன பின்னமாக வெட்டிக் கொன்று விடுகிறுன்!

தன்னுல் ஏவப்பட்ட வீரர்கள் அவன் கைவாளால் மடிந்து போனதைக் கேள்வியுற்ற மன்னவன், சினந்து மேலும் சில வீரர்களை அனுப்பினுன். அவர்களையும் அவ்வாறே தன் கைவாளாலேயே கண்டதுண்டமாக வெட்டிக் கொன்ருெழிக்கிறுன் அந்த சைவத்தின் திருவுருவம்! பிறகு அந்த நாட்டு மன்னன் அந்தப் பணியாளனின் மகிமையைக் கேள்வியுற்று அவன் காலடியிலே மண்டியிட்டானே என்னவோ...! அது எவ்வாறேனும் போகட்டும்! இதனின்றும் நாம் தெளிவாக அறிந்துகொள்வதெல்லாம் "உயிர்கொல்லாமையை உள்ளத்திலே உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கும் வீரசைவர்கள் கரத்திலே எப்போதுமே கூறிய வாளைத் தாங்கிய நிலையில் காட்சி டளித்திருக்கிறுர்கள் என்றும், அவர்கள் களம் பல காணும் போர் வீரர்களையே சின்னபின்னமாக வெட்டிக் கொன்று குவிக்குமளவிற்குச் சிறந்த போர்ப்பயிற்சி பெற்றவர்கள் என்பதுவும், எவ்வளவு அக்ரமங்கள் புரிந்தாலும் 'மதம்' எனும் புனிதத் திரையிலே தெய்வீக புருடர்களாக விளங்கி வந்தனர்" என்பதுவுமே!

அவ்வளவு பேரையும் கொன்று குவித்த அந்த வெறிபிடித்தவனின் கால்களிலேதான் சைவத்தையும், கொல்லாமையைப் பற்றியும் துதி பாடும் அந்நாளைய கவிஞரும், தெய்வீகப் பிறவியும் பழுத்த சைவரும் ஆனவரும், இன்றைய சைவத் தூயவர்களும் மண்டியிட்டுப் பணிந்து கிடக்கிறுர்கள்! இதனினும் வியப்பு அந்த வெறிபிடித்தவனின் ஈனச்செயலுக்குப் புண்ணிய விளக்கமும் தந்து மகிழ்கிறுர்கள்!

"தீண்டத்தகாதவனும், அறியாமையால் அரசன் ஆணையை மேற்கொண்டு, பிடிக்க வந்து கைவாளால் மாண்டுபோன அந்த வீரர்களும் பாபக் கரை சேராமல் புனிதமடைவர்! அவர்களை ஏதும் செய்யாமல் விட்டிருப்பாரேயானுல் 'முக்தி' கிடைக்கப் பெருது இன்னலில் சிக்கித் தவிப்பது உறுதி! ஆகவே அச்சைவத் திருமகன் தன் கைவாளால் அவர்களைக் கொன்ருெழித்து, செய்த பாபம் நீங்குமாறு 'கருணை' புரிந்திருக்கிறுர்" என்கிறுர்கள் இந்நாளைய சைவர்கள்! என்னே...தத்துவம்!

ஈவு, இரக்கம் இழந்து, இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு பல்லுயிர்களையும் கொன்ற, மிருக குணம் கொண்ட ஒரு கீழ்மகனின் கால்களை...எங்கே, நாங்களும் எங்கள் வீரசைவக் கவிஞரும் பணிந்து மண்டியிட்டுக் கிடக்கிறோம் என்கிற சைவர்கள் ஒரு முறை, 'கலியாணபுரி வசவேசர் திருமடாலயத்தையும், அதிலே குடிகொண்டிருந்த அடியார்களின் ஆடைகளைத் தூய்மைப்படுத்திக் கொடுத்துக் கொண்டிருந்த பணியாளன் 'மடிவாலமாச்சையர்' என்கிற அச்சைவத் திருமகனையும், அவன் வெறிச்செயலுக்குச் சினந்து வீரர்களை அனுப்பிய வீச்சல மன்னனையும், தாங்கள் வணங்கிப் போற்றி வரும் தெய்வங்களனைத்திற்கும் போல, சமமான மதிப்பளித்து வெறியாட்டம் ஆடிய அவன் கால்களுக்குப் 'பொன்னுலான கழல்' அணிந்து 'கருணையே' உருவானவனே என்று கூறி மண்டியிட்டுப் போற்றிய துறைமங்கலம் 'சிவப்பிரகாசசுவாமி'களையும் நினைவிற்குக் கொண்டுவருவார்களாக!

சமுதாயத்தை உய்விக்க இந்த மண்ணிலே தலைமுறை தலைமுறையாகப் பாடுபட்ட, தூய்மை நிறை அத்தனை உயிர்களுக்கும் இழுக்கைத் தேடித்தரும் இச்சிறு பாடலின் கருத்துபற்றியும் சிந்திக்க! உலகிற்கு அன்பு, அறம் ஆகியவை பற்றிய நன்னெறியைத் தோற்றுவிக்க அரண்மனையையும், அரச போகத்தையும், அறிவும், அழகும், குழந்தை மனமும் கொண்ட மனைவியையும், தன் அன்புச் செல்வனையும் துறந்து, அரசமரத்தடிக்கு வந்து—சாதாரண ஒரு ஆட்டுக்குட்டிக்கு, அம்பு பட்ட புருவிற்கும் உளம் உருகிக் கலங்கிக் கண்ணீர் விட்டு நீதி செப்பிய ஒரு கௌதமபுத்தனைப் பற்றியும் சிந்திக்க! தலையிறக்கம் கொள்ளாதவர் வீரசைவராவரோ!

வீரசைவர்கள் தங்கள் கரங்களிலே பற்றியிருக்கும் 'பிரபுலிங்க லீலை' நூலிலே முதல் அத்தியாயமான 'துதி கதி'யில் காணட்டும்! இதோ...பாடல்!

"வார்க்குங் குமமென்
முலைபாக னடியார்
அறுவை மாசடித்துத்
தீர்க்குஞ் செயல்போல்
விச்சலமன் னவன்றன்
சேனை செய்பிழையைத்
தாக்குங் கரவாள்
கொடுசின்ன பின்னமாகத்
தடுந்திட்டுப்
போக்குங் கருணை மடிவால
மாச்சன் பொன்னங்
கழல் போற்றி."

[வார்-கச்சு; அறுவை-ஆடை; மாசு அடித்து-அழுக்குப் போக்கி; கரவாள்-கைவாள்; தடுந்திட்டு-வெட்டி.]

★

முல்லை

— வைகாசி இதழ் —

எங்கும்

விற்பனையாகிறது!

அவரே சாட்சி!

காட்சி 1.

[ஆற்றங்கரை யோரத்தில் 'அவனும்'—'அவளும்' காதல் பூண்டனர். அடிக்கடி சந்தித்துக் கொண்டனர். ஆனுல்; இன்று அவன்....]

தலைவன்: சேல்விழியாளே! அந்தப் பால்பிறை நிலவு—முழு நிலவு ஆவதற்குள்—பிற நாடு சென்று, பொருள் சேர்த்து வந்து சேர்வேன். சுடுபாலையில் நான் நடந்தாலும்—அழகு சுடரிருக்கும் உன் சோதி முகம் மறவேன்! பாலையென்ன—வாளையே எடுத்து வந்து—என்னை வெட்டினுலும்; அந்த வேளையிலும்; அன்பே! உன் நினைவே! உன் நினைவே!! எங்கே; இன்பமே; 'சென்று வா' என்று கூறு...

தலைவி: "சென்று வாருங்கள்" என்று சொல்வதைவிட—'எமனே இன்று வா!—எனைக் கொன்று போ' எனச் சொன்னுலும் நன்றுதான். எல்லாமே ஒன்று தான். இல்லையா கண்ணுளா?

தலைவன்: கள் இருக்கும் மலர்க்கூந்தலாளே! கலங்காதே. சில நாளே இப்பிரிவு—வந்ததும் மணநாளே! விடை பெறட்டுமா, அன்பே!

தலைவி: தடையிட்டாள், கண்ணீர் காட்டி—அதனுல் வண்டி குடை கவிழ்ந்த வாழ்வாகிவிட்டது பொருளில் அவனுக்கு—என்ற ஊராரின் பழியேன் எனக்கு?

தலைவன்: அணங்கே! ஆய்மயிலே! உளமறிய காதல் புரிந்த நாம்—உலகறிய மணம் புரிய ஓடோடி வருவேன்...

காட்சி 2—இடம்: வீடு.

[அவன் சென்று பல நாள் ஆயின. பௌர்ணமியும் வந்து போயிற்று.]

தோழி: அம்மா! அழுத கண்ணும்—வடதிசை நோக்கித் தொழுத கையுமாக ஏனம்மா இருக்கிறீர்கள்?

தலைவி: தோழி! என் உளம் நீ! உன்னிடம் மறைவென்ன? சலசலக்கும் ஆற்றங்கரையினிலே—பொன்னினும் பளபளக்கும் மேனி கொண்ட பேரழகனைக் கண்டேன். மாண்டேன்! வீரம் புதைந்திருக்கும் அவன் மார்பகத்தில்-என் விழி புதைய-கழுத்து முத்தாரம் உடைந்து சிதைய எனை அணைத்தான். மீண்டேன்! அவனும் மீண்டான்! மணக்க அன்றே பொருள் தேடச் சென்ருன்! 'பிரியேன்! பிரிந்தாலும் உன் நினைவால் எரிவேன்!' என்ருன்.

தோழி: (கிண்டலாக) நீங்கள் காதல் புரிந்த கதை நன்ருக இருக்கிறது. அவர் திரும்பி வந்து உங்களையேவா மணப்பதாகச் சொன்னுர்?

தலைவி: ஆமாம்!

தோழி: அதற்கு சாட்சி?

தலைவி: (திகைத்து) சாட்சி! சாட்சி!! 'படிருந்த தேக சுகம்'—அந்தக் காட்சியைத் தவிர வேறு எதுவும் எனக்கு வரவில்லையேடி, சாட்சியாக!

தோழி: ஒருவரும் இல்லையா? உருப்பட்டது போ உங்கள் காதல். ஊரறிய நடப்பதல்லவாம்மா திருமணம்? நீங்கள் காதல் மணம் செய்துகொண்டபோது ஒருவருமே இல்லையா? நினைவுபடுத்திப் பாருங்கள்...

தலைவி: (யோசித்து) இல்லை. அவரே இருந்தார்.

தோழி: யாரும் இல்லாத இடத்தில் உங்கள் நலத்தை 'திருடிய' அவரை நினைந்தா நீ உருகுகிருய்? ஒருவரும் இல்லாத இடத்தில்—ஒரு பொருளை எடுத்தவன் கள்வன் அல்லவாம்மா?

தலைவி: (திகைத்து) கள்வன்! என் காதலன் கள்வன்!!

தோழி: மறைவாக வந்தவனின் மயக்கு மொழியிலே மனதைப் பறிகொடுக்கலாமா அம்மா? நாளை, இந்தத் தையலை நான் கண்டதும் இல்லை-இவள்பால் மையலை நான் வைததும் இல்லை-என்று பொய் சொல்லி-உன்னைக் கைவிட்டால் உன் உயிர்தான் எங்கே?

தலைவி: இறுதியாகப் போகும்போதும்-இரு விழியில் நீர் விட்டுச் சென்ற அவரே உறுதிமொழி பொய்த்தால் என் செய்வேன்...? குளிர்நிலா-வெம்மைக் கதிரோனுய் மாறிட்டால் குவலயம் தான் என் செய்யும்? தென்றலின் அசைப்பிலே இதழ் திறந்த முல்லை-திடீரென தென்றல் புயலானுல் என் செய்யும்?...விழும்! மடியும்! அந்த 'விதி'தான் எனக்கும். (கலங்குதல்.) அடி, அடி, ஒரு சாட்சி உண்டு.

தோழி: என்னம்மா? என்னம்மா...?

தலைவி: தேரை ஒத்த தோளனேடு நான் இருந்தபோது-ஊரை நோக்கி ஓடும் அந்த ஆற்ருேரத்திலே-நாரை ஒன்று நின்றிருந்தது. அதுவே சாட்சி!

தோழி: (சிரித்து) நல்ல சாட்சி! அது நாரை தானு?

தலைவி: இன்னுமென்னடி சந்தேகம். தினைத்தண்டு போல இருந்தது அதனின் பசுங் கால்கள். அதனை நான் மறப்பேனு?

தோழி: ஆமாம், அந்த நாரை என்ன செய்து கொண்டிருந்தது...?

தலைவி: காதல் செய்துகொண்டிருந்த என் கண்களால் அது என்ன செய்துகொண்டிருந்தது, என்பதை கவனிக்க மறந்துவிட்டேன். இரு-இரு...(யோசித்து) ம்-ம்...ஒற்றைக் காலிலே நின்றுகொண்டு-ஓடுகின்ற ஆற்றிலே, உருமீன் வருமா என்ற ஒரே நோக்கோடு, வாடியிருந்தது. போதுமா?

தோழி: (சிரித்து) பிறந்த குழந்தையினும் பேதையம்மா நீ! இதழ்த்தேனை மாற்றிக்கொண்ட உங்களை-மீனைப் பார்த்திருந்த நாரை எப்படிப் பார்த்திருக்கக் கூடும்? காதலுக்காக உன் கண்ணை அவர்மீது வைத்திருந்தாய்-பெரிய கயலுக்காக நாரை தன் கண்ணை ஆற்றில் வைத்திருந்தது. எல்லாவற்றையும் மறந்து நின்ற நாரை எப்படியம்மா சாட்சியாகும்?

தலைவி: (சிறு கோபமாக) போடி! யாரும் இல்லை சாட்சி—"கூடிவிட்டோம் அன்பாலே! அதற்காக இனி வீடிழப்பேன்-நாடிழப்பேன்-வசந்த காலம் வருவதற்குள் ஓடிவந்து உன் கைபிடிப்பேன்!" என்று தனிமையிலே உள்ளம் திருடிய அந்தத் தலைவனே சாட்சி! அவரே சாட்சி!

[குறுந்தொகைத் தழுவல்.]

—கோ. இறைமுடிமணி.

சிரிப்புத்தான் வருகுதைய்யா!

நமது மத்திய நிதிமந்திரி டி. டி. கே. உலகத்திலேயே ஒரு அதிசயமான பிறவி. மூன்றுகால் ஆடு, இரண்டு தலை மாடு மாதிரி இதுவும் ஒரு விநோதப் பிறப்பு. அரசியலில் இவர் போதிக்கும் புதிய தத்துவங்கள் டமைய நாடக மேடை பபூன்களை நமக்கு நினைவுறுத்தும். அமைச்சர்களின் காரியங்களைப் பற்றி அபிப்பிராயம் சொல்லுவோர் அமைச்சர்களின் நண்பர்களாக இருக்க வேண்டும் என்பது 'பரத கண்டத்தின் சுபிட்சத்தை' முன்னிட்டு அவர் வழங்கியிருக்கும் புதிய தத்துவம் ஆகும். அன்பர் ஆச்சாரியார் அவர்கள் புது வரிகளைக் கண்டித்தபோது அதற்குப் பதிலாக டி. டி. கே. தந்தது தான் இந்தத் தத்துவம். நண்பர்கள் மட்டும் தானே ஓட்டுப் போட்டு இவரை டெல்லிக்கு அனுப்பினார்கள்? மற்றவர்கள் எப்படி அபிப்பிராயம் சொல்லலாம்? இவ்வளவு கோமாளித்தனமான ஒரு நிதிமந்திரியைப் பெற்றதற்காக தமிழகத்து மக்கள் இமயமலை அடிவாரத்துக்குச் சென்று தவங்கிடக்க வேண்டியது அவசியமாகும்.

"உமையொரு பாகனே! இமகிரி வாசனே! உலகாளும் ஆண்டவனே! மலஜலம் கழிப்பதைத் தவிர பாக்கி எல்லாவற்றிற்கும் வரி வந்துவிட்டது ஸ்வாமீ! பெண்கள் மூக்கிலே போட்டிருக்கும் நத்திலேயிருந்து சகல ஆபரணங்களையும் தட்டிப் பார்த்து, தடவிப் பார்த்து, எடை போட்டு வரி விதிக்க உத்திரவு வந்துவிட்டது தேவனே! அதிகாரிகள் வந்து சொத்து எவ்வளவு என்று கேட்டால் அனைத்தையும் எடுத்து அவர்கள் முகத்துக்கு நேரே நீட்டவேண்டி வந்துவிட்டது, கால் செருப்பு உட்பட! தேவாதி தேவனே! வரி வசூல் செய்யவும் நிதி அமைச்சரையே அனுப்பிவையப்பா! ஆண்டிகளின் கோவணங்கள் உட்பட அனைத்தையும் அவரே வாங்கி மதிப்புப் போட்டால் நன்றாக இருக்கும். இது ஒன்றும் அவருக்குப் புதியதல்ல. வெள்ளைக்காரர்களின் கால்சட்டைகளை பல முறை துவைத்துக் கொடுத்திருக்கிறார். வீடு வீடாக அவர் வந்தால் நன்றாக இருக்கும். திரிபுரம் எரித்த தேவனே! அரிபரந்தாமா! ஆலம் உண்ட நீலகண்டா! நக்ஷத்திரேயர் அரிச்சந்திரனைப் பின்தொடர்ந்து வந்ததுபோல், இவரும் வந்தால், "கோட்டுப்போட்ட இந்த சின்ன மச்சானுக்கு' ஓட்டுப் போட்ட பெண்கள் எல்லாம் வாய்க்கு வந்தபடி பாட்டுப் பாட ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்" என்று 'ஆண்டவனை' வேண்டிக் கொள்ளலாம்.

★

ஆச்சாரியார் ஒரு நல்ல கருத்தை வெளியிட்டார். வரிச்சுமை அதிகமாகும்போது "கொடுக்காவிட்டால் என்ன?" என்கிற துணிச்சல் ஏற்பட்டுவிடும் என்றார். இது ஏற்படவேண்டும் என்பதுதான் நமது தாளாத விருப்பமாகும். "வரி வசூலிப்பவர் வருகிறாரா? சரி! ஐயா வரி வேண்டுமா? நீங்கள் ஆட்சி நடத்துகிற மூஞ்சிக்கு வரி வேறயா? எங்கே அந்த சதி மந்திரி? அவரை இங்கே கொண்டுவாருங்கள்! ஆப்பிரிக்க நாட்டு வரிக்குதிரை மாதிரி அவர் உடம்பை ஆக்குகிறோம்!" என்று எல்லோரும் சொல்லக் கூடும். "வரிகொடா இயக்கம்" தீவிரமாக ஆரம்பமாகும். "உருப்படாத ஓட்டை ஐந்தாண்டுத் திட்டத்துக்காக செருப்பு முதல் தாலிவரை அளவெடுக்கத்தானா மாடுகளுக்கு ஓட்டுப் போட்டோம்? அந்திபட்டு ஆறுமணிக்கு சிங்காரித்து அழகுதரும் தேவடியாள், காலை மணி ஆறுக்கு கண்ணாவிக் கோலத்தில் காட்சி தருவதுபோல், தேர்தல் காலத்தில் ஆவடியைக் காட்டி காவடி எடுத்த காங்கிரஸ் மாடுகள், ஜெயித்து வந்ததும் எல்லா மக்களையும் சாவடிக்கு அனுப்புகிறார்களே, சாகடிக்கப் பார்க்கிறார்களே" என்று ஓட்டுப் போட்ட மக்கள் அலறுகிறார்கள். இந்த மக்களுக்கு நன்றாக வேண்டும். இது போதாது, இன்னும் வேண்டும். தோலுரிக்க வேண்டிய மாட்டை சிங்காதனத்தில் உட்கார வைத்தால் அது தலைமயிரைத் தின்னாமல் தடவியா கொடுக்கும்? பயங்கரமான இந்தப் பாருங்கல்லைத் தேர்தலுக்கு முன்னாலேயே தயார் செய்துவிட்டு, 'ஓட்டுப் போடுங்கள். உங்களைக் கூட்டோடு கைலாசம் அனுப்புகிறோம்' என்று பேசிக்கொண்டு கொன்றேவிட்டார்களே பாவிகள்! அட முட்டாள் ஜனங்களே, அனுபவியுங்கள்! இரண்டு ரூபாய்க்கு ஓட்டுப் போட்ட இளித்த வாயர்களே அனுபவியுங்கள்! ஓட்டின் மதிப்புத் தெரியாத ஏமாளிகளே அனுபவியுங்கள்!

★

மண்ணெண்ணெய்மீதும் காகிதத்தின்மீதும் உள்ள வரியைப் பரிதாபப்பட்டு நீக்கிவிட்டார்கள் பாராளும் பண்டித சிரோன்மணிகள். இது ஏன் என்பதை இப்போதாவது புரிந்துகொண்டீர்களா? அடுத்த தேர்தலில் காங்கிரஸ் மாடுகளைக் கொன்று போட்டு, காகிதத்தைக்கொண்டு மூடி, மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பு வைக்கவேண்டும் என்பதற்காகத்தான். இதைப் புரிந்து கொள்ளாமல் மண்ணெண்ணெய்யை ஊற்றி விளக்கேற்றிக் கும்பிட்டீர்களோ, அடுத்த தலைமுறை சமாதிதான்.

பாரத மாதாகி ஜே!
ஆஸ்தி வரிக்கு ஜே!
எதிர்பாருங்கள்!
இனி அடுத்த வரிகள்!
ஜனவரி, பிப்ரவரி!

எதிர்காலத்தில் நமக்குக் காத்திருக்கும் வரிகள் **கீழ்க்கண்டவை.**

1. **சிற்றின்ப வரி** (மனைவியோடு எத்தனை முறை கூடினோம் என்பதைக் கணக்கெடுத்துச் சொல்லித் தரவேண்டியவரி.)
2. **க்ஷவர வரி** (க்ஷவரம் செய்யும் தோழருக்குத் தருவதுபோல், ஒவ்வொரு க்ஷவரத்தும் ஒரு அணா வீதம் நிதி மந்திரிக்குத் தரவேண்டும். இதில் நிதி மந்திரியே வந்து க்ஷவரம் செய்யவேண்டும் என்று யாரும் எதிர்பார்க்கக்கூடாது. தமிழ்நாடு முழுக்க க்ஷவரம் ஆகும் வரை இந்த வரி நீடிக்கும்.)
3. **பல் வரி** (முப்பத்திரண்டு பல்லும் முழுக்க உடையவர் வாரம் மூன்று ரூபாய் வீதம் தரவேண்டும். யாருடைய பல்லாவது வெளியிலே நீட்டிக் கொண்டிருந்தால் அதற்கு 'எக்ஸ்ட்ரா வரி' வரிவசூலிப்பவரின் பல்லைத் தட்டி யாராவது கையிலே வைத்திருந்தால், அந்தப் பல்லுக்கு வரி செலுத்த வேண்டியவர் பல்லுக்கு உடையவரே யாவார். பொய்ப்பல் கட்டியுள்ளவர்கள் அதை அப்படியே கழற்றி அதில் இருக்கும் மாமிசத் துண்டுகளோடு, டி. டி. கே. வசம் கொடுத்துவிடலாம். பிற வரிகள் அடுத்த வாரம்.

—வணங்காமுடி

பன்மொழிப் புலவர் மணிவிழா நிதி

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.	... ரூ.	501	0	0
கண்ணதாசன்	... ,,	501	0	0
'தென்றல்' தமிழ்ப்பித்தன்	... ,,	51	0	0
ஜாம்நகர் அசோகன்	... ,,	5	0	0
பல்லடம் இரா. இரத்தினம்	... ,,	5	0	0
தேன்கனிக்கோட்டை விசயசேகரன்	... ,,	2	0	0
வேலூர் ஏ. ஆர். ஆறுமுகம்	... ,,	2	0	0
சகந்தராபாத் வாதிராசன்	... ,,	1	0	0
பி. எஸ். நாகராசன்	... ,,	1	0	0
பி. அம்சா	... ,,	1	0	0
குப்புராமன்	... ,,	1	0	0
டி. எஸ். லட்சுமணமூர்த்தி	... ,,	1	0	0
எம். எஸ். ராமமூர்த்தி	... ,,	1	0	0
டி. ஜே. நடராசன்	... ,,	1	0	0
எம். கிருஷ்ணமூர்த்தி	... ,,	1	0	0
ம. ஒ. சுப்பராயலு	... ,,	1	0	0
அருள்ராசு	... ,,	1	0	0
இரா. இளந்தென்றல், சென்னை-21	... ,,	1	0	0
திருவில்லிபுத்தூர் ச. நடராசன்	... ,,	1	0—1	
பல்லடம் மா. பழனியப்பன்	... ,,	1	0	0
இதுவரை மொத்தம்	ரூ.	1080	0—1	

ஆந்திரரும், கேரளரும், கன்னடரும் திராவிடக் கூட்டாட்சியின் காரணத்தை அறிய — திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிரோட்டம் உலகு அறிய

'HOMELAND'

(ஆங்கில வார இதழ்)

ஆசிரியர்: **அண்ணா**

★

2-6-57 முதல் ஞாயிறு தோறும் வார ஏடாக வெளிவருகிறது.

★

டபுள் கிரவுன் 1 x 4 அளவில்
8 பக்கங்கள் கிளேஸ் காகிதம்

தனி இதழ் 2 அணா - ஆண்டு சந்தா ரூ. 7.

விவரங்கட்கு: நிர்வாகி, 'ஹோம்லண்ட்'
95, திருக்கச்சிநம்பித் தெரு, காஞ்சீபுரம்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ் நாடு.